ABSTRACT

Forests – The Nilgiris District - Gudalur Taluk, Survey No.1/2 of Cherumulli Village, Cherumulli Forest Block-1 – 334.80.0 Hectare of land - Declaration as Reserved Forests under section 16-A of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882) – Notification – Approved.

Environment, Climate Change - Forest (FR.14) Department

G.O.(Ms) No.60 **Dated: 31.08.2021**

பிலவ, ஆவணி – 15,

திருவள்ளுவர் ஆண்டு – 2052

Read:-

1. G.O.(Ms)No.363, Revenue (SS-1(1)) Department, Dated: 28.11.2011.
2. G.O.(Ms)No.57, Environment and Forests (FR.14) Department, Dated: 14.06.2019.
3. Tamil Nadu Government Gazette (Extra ordinary) Notification No.256, Dated: 14.06.2019.
4. From the Principal Chief Conservator of Forests Letter No.TS2/37409/2019, Dated: 01.10.2019 and 05.11.2019.

=======

ORDER:

The proposal of the Principal Chief Conservator of Forests sent in his letter fourth read above to declare 334.80.0 Hectare of land in Survey No.1/2 of Cherumulli Village in Cherumulli Forest Block-1 in Gudalur Taluk of The Nilgiris District as Reserved Forest and for publication of Notification under section 16-A of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882) is approved and appended for publishing it in English in the Tamil Nadu Government Gazette, Dated 03.03.2022 and in Tamil in The Nilgiris District Gazette, Dated 18.03.2022.

2. The Works Manager, Government Central Press is requested to ensure that the Notification is published in the Tamil Nadu Government Gazette dated 03.03.2022. On receipt of Notification, the Branch Manager, Government Branch Press, Salem shall take action to publish them in The Nilgiris District Gazette.

3. They shall ensure that printed copies of said Notification both in English and Tamil versions shall be communicated to the Officers as shown in the Annexure to this order, after publication.

4. The District Collector, The Nilgiris and the Principal Chief Conservator of Forests shall watch the publication of the Notification and bring to the notice of the Government, if any delay in publication of Notification. The District Collector, The Nilgiris and the Principal Chief Conservator of Forests shall also ensure that necessary entries in the Village / Revenue records in respect of the said Forest Block are suitably modified / updated.

(BY ORDER OF THE GOVERNOR)

SUPRIYA SAHU
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

To
The Works Manager,

(..2..)

Government Central Press,
Chennai-600 079 (w.e).
The Branch Manager,
Government Branch Press, Salem (w.e).
The Additional Chief Secretary / Commissioner of Land Administration,
Chennai – 600 005 (w.e).
The Principal Chief Conservator of Forests (Head of Department),
Chennai-600 015 (w.e).
The Additional Principal Chief Conservator of Forests, Coimbatore (w.e).
The District Forest Officer, Gudalur
The District Collector, Nilgiris
The Forest Settlement Officer, Gudalur(w.e).
The Revenue and Disaster Management Department, Chennai-9(w.e).
The Law Department, Chennai-9(w.e).
Stock File/Spare Copy.

//FORWARDED BY ORDER//

V. S. Swarna
SECTION OFFICER 15/09/2021

Verified RealEstate™

Annexure to G.O.(Ms) No.60, Environment, Climate Change and Forest (FR.14) Department, Dated: 31.08.2021.

Sl. No.	Designation and Address of the Officers	English Copies	Tamil Copies
1.	The Principal Secretary, Environment, Climate Change and Forest Department, Chennai – 600 009.	2	2
2.	The Principal Chief Conservator of Forests (Head of Department), Chennai -600 015.	3	3
3.	The District Collector, The Nilgiris	2	2
4.	The Additional Principal Chief Conservator of Forests, Coimbatore	5	5
5.	The District Forest Officer, Gudalur	12	12
6.	The Forest Settlement Officer, Gudalur	8	8

SUPRIYA SAHU
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

//True Copy//

V.S. Swarna
Section Officer 15/09/2024

Verified RealEstate™

APPENDIX.

NOTIFICATION.

In exercise of the powers conferred by section 16-A of the Tamil Nadu Forest Act, 1882 (Tamil Nadu Act V of 1882), the Governor of Tamil Nadu hereby declares the land vested with the Government Under the Gudalur Janmam Estates (Abolition and Conversion into Ryotwari Act, 1969 (Tamil Nadu Act 24 of 1969) and already determined as forest by the Settlement Officer under the said Act, the area and boundaries of which are specified in the Schedule below, as reserved forest.

THE SCHEDULE.

1.	Name of the District	:	The Nilgiris
2.	Name of the Taluk	:	Gudalur
3.	Number and name of the Village	:	No.1, Cherumulli Village
4.	Survey number of the forest block	:	1/2
5.	Name of the Forest Block	:	Cherumulli Forest Block-1
6.	Extent of the Forest Block	:	334.80.0 Hectare (or) 827.30 acres

BOUNDARIES.

North:- The boundary line starts from the junction of No.9, Nelliyalam Village boundary and Survey Number 1/2 of Cherumulli Village the boundary generally runs eastwards along the southern boundary of No.9, Nelliyalam and No.7 Nellakottai Villages and meets at the tri-junction of No.1 Mudumalai Village boundary, No.7 Nellakottai Village boundary and Survey Number 1/2 of Cherumulli Village. Thence, the boundary runs southeastwards along the southwest boundary of No.1 Mudumalai Village boundary (Mudumalai Tiger Reserve) and meets at the tri-junction of Survey Numbers 113 of Cherumulli Village, 1/2 of Cherumulli Village and No.1 Mudumalai Village boundary.

East:- Thence, the boundary runs southwards and southwestwards along the southwest boundary of Survey Numbers 113 and 92 of Cherumulli Village and meets at the tri-junction of Survey Numbers 92, 6 and 1/2 of Cherumulli Village.

South :- Thence, the boundary runs northwestwards along the northern boundary of Survey Number 6 of Cherumulli 1 Village until it reaches the tri-junction point of Survey Numbers 1/2, 3 and 6 of Cherumulli 1 Village. Thence, it generally runs northwards along the eastern boundary of Survey Number 3 of Cherumulli Village and meets at the tri-junction point of Survey Numbers 3, 1/2 and 1 /1 of Cherumulli Village. Thence, the boundary generally runs eastwards, northwards and turns southwards along the southern, eastern, western boundary of Survey Number 1/1 of Cherumulli Village and meets at the tri-junction of Survey Numbers 3, 1/1 and 1/2 of Cherumulli

(..6..)

Village. Thence, it turns southwestwards along the northwest boundary of Survey Number 3 of Cherumulli Village and meets at the tri-junction of Survey Numbers 3, 1/2 of Cherumulli Village and Survey Number 2 of Nelliyalam Village. Then it turns northwards, southeastwards, northwards and southwestwards and generally runs westwards and southwards along the eastern, northern and western sides of Survey Number 2 of Nelliyalam Village and meets at the tri-junction of Survey Number 2 of Nelliyalam Village, Nelliyalam Village common boundary and Survey Number 1/2 of Cherumulli Village.

West :- Thence, the boundary generally runs westwards and northwards along the eastern common boundary of No.9 Nelliyalam Village and meets at the starting point.

SUPRIYA SAHU
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

//True Copy//

V.S. Swarna 15/09/2021
Section Officer

Verified RealEstator

சுருக்கம்

வனம் – நீலகிரி மாவட்டம் – கூடலூர் வட்டம் – புல எண். 1/2, செறுமுள்ளி கிராமம், செறுமுள்ளி வன வட்டாரம்–1 – 334.80.0 எக்டேர் நிலம் – தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 16–Aன் கீழ் காப்பு வனமாக அமைத்து அறிவிக்கை செய்தல் – ஒப்புதல் ஆணை வெளியிடப்படுகிறது.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம். 14) துறை

அரசாணை (நிலை) எண்.60

நாள்: 31.08.2021
பிலவ –ஆவணி – 15,
திருவள்ளுவர் ஆண்டு–2052

படிக்க.:

1. அரசாணை (நிலை) எண். 363, வருவாய் [SS–1(1)] துறை, நாள் 28.11.2011.
2. அரசாணை (நிலை) எண். 57, சுற்றுச்சூழல் – வனத் (வனம்.14) துறை, நாள் 14.06.2019.
3. தமிழ்நாடு அரசிதழ் (அசாதாரமானது) எண்.256, நாள்.14.06.2019.
4. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்), சென்னை–15. கடித எண். டிஎஸ்2/37409/2019, நாள். 01.10.2019 மற்றும் 05.11.2019.

=====

ஆணை:

மேலே நான்கில் படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கடிதத்துடன் அனுப்பப் பெற்ற நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், நிலஅளவை எண்.1/2, செறுமுள்ளி கிராமம், செறுமுள்ளி வன வட்டாரம் – 1, 334.80.0 எக்டேர் நிலப் பரப்பினை தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 16–Aன் கீழ் காப்பு வனமாக அறிவிக்கை செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழ் நாள். 03.03.2022–ல் ஆங்கிலத்திலும் நீலகிரி மாவட்டம் அரசிதழ் நாள். 18.03.2022–ல் தமிழிலும் வெளியிடும் பொருட்டு இத்துடன் இணைக்கப்படுகிறது.

2. 03.03.2022–ந் தேதிய தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுவதை உறுதி செய்துக் கொள்ளுமாறு சென்னை அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

Verified by RealEstate™

இவ்வறிவிக்கை கிடைக்கப்பெற்றவுடன் அதனை தமிழில் நீலகிரி மாவட்ட அரசிதழில் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு, சேலம் அரசு கிளை அச்சக மேலாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

3. அச்சிடப்பட்ட தமிழ், ஆங்கில அறிவிக்கை நகல்களை இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதை மைய கிளை அச்சக பணி மேலாளர்கள் உறுதி செய்துக்கொள்ள வேண்டும்.

4. அறிவிக்கையானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதை கண்காணிக்கவும் அறிவிக்கை வெளியிடுவதில் காலதாமதம் இருப்பின், அவற்றை அரசின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் எனவும் மேலும், அறிவிக்கை செய்யப்படும் நிலப்பரப்பின் விவரங்களை கிராம வருவாய் ஆவணங்களில் உரிய மாற்றம் செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும் எனவும் நீலகிரி மாவட்ட ஆட்சியர் மற்றும் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் ஆகியோர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுப்ரியா ஸாஹூ
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–79 (இணைப்புடன்).
கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், சேலம் (இணைப்புடன்).
கூடுதல் தலைமை செயலாளர் / ஆணையர், நில நிர்வாகம்,
சென்னை–5 (இணைப்புடன்)
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்),
சென்னை–600 015 (இணைப்புடன்).
கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர்,
கோயம்பத்தூர் (இணைப்புடன்).
மாவட்ட ஆட்சியர், நீலகிரி (இணைப்புடன்).
மாவட்ட வன அலுவலர், கூடலூர்(இணைப்புடன்).
வன நிர்ணய அலுவலர், கூடலூர் (இணைப்புடன்).
வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை /சட்டத் துறை,
சென்னை–9 (இணைப்புடன்).
இருப்புகோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஆ.எஸ்.சிவன்னா
பிரிவு அலுவலர் 15/09/2021

Verified RealEstate™

அரசு ஆணை (நிலை) எண்.60,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.14) துறை,
நாள்.31.08.2021–ன் இணைப்பு

வரிசை எண்.	அலுவலரின் பதவி மற்றும் அலுவலக முகவரி	ஆங்கிலம்	தமிழ்
1	முதன்மைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை – 600 009.	2	2
2	முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்), சென்னை–600 015.	3	3
3	மாவட்ட ஆட்சியர், நீலகிரி	2	2
4	கூடுதல் முதன்மை வனப்பாதுகாவலர், கோயம்புத்தூர்	5	5
5	மாவட்ட வன அலுவலர், கூடலூர்	12	12
6	வன நிர்ணய அலுவலர், கூடலூர்	8	8

சுப்ரியா ஸாஹூ
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

Verified RealEstate ™

பிற்சேர்க்கை.

அறிவிக்கை.

தமிழ்நாடு 1882 ஆம் ஆண்டு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 16–A ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 1969 ஆம் ஆண்டு கூடலூர் ஜென்மம் எஸ்டேட்ஸ் (ஒழிப்பும் மற்றும் இரயத்வாரியாக மாற்றலும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1969) கீழ் அரசிடம் நிலைபெற்று, மேற்சொன்ன சட்டத்தின் கீழ் முன்னதாக வனமாக வன நிர்ணய அலுவலரால் தீர்மானிக்கப்பட்ட பகுதியையும், விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளையும் காப்பு வனமாக இதனால் அறிவிக்கிறார்.

விவர அட்டவணை.

1.	மாவட்டத்தின் பெயர்	:	நீலகிரி
2.	வட்டத்தின் பெயர்	:	கூடலூர்
3.	கிராமத்தின் எண்ணும் பெயரும்	:	எண்.1, செறுமுள்ளி
4.	வனவட்டாரத்தின் நில அளவை எண்	:	1/2
5.	வனவட்டாரத்தின் பெயர்	:	செறுமுள்ளி வன வட்டாரம்–1
6.	வனவட்டாரத்தின் பரப்பளவு	:	334.80.0 எக்டேர் அல்லது 827.30 ஏக்கர்

நாற்புற எல்லைகள்.

வடக்கு :– இவ்வெல்லைக் கோடானது செறுமுள்ளி கிராமம் நில அளவை எண்.1/2 மற்றும் எண்.9, நெல்லியாளம் கிராமம் பொது எல்லை சந்திக்கும் இடத்திலிருந்து தொடங்கி கிராமம் எண்.9, நெல்லியாளம் மற்றும் கிராமம் எண்.7, நெலாக்கோட்டை கிராம எல்லைகளின் தெற்கு எல்லையோரம் பொதுவாக கிழக்கு திசையில் சென்று கிராமம் எண்.1 முதுமலை கிராமம், கிராமம் எண்.7 நெலாக்கோட்டை கிராம எல்லை மற்றும் செறுமுள்ளி கிராமம் நில அளவை எண்.1/2ன் முச்சந்தியில் சென்றடைகிறது. பிறகு, இவ்வெல்லைக் கோடானது கிராமம் எண்.1 முதுமலை கிராம தென்மேற்கு எல்லையோரம் (முதுமலை புலிகள் காப்பகம்) தென்கிழக்காக சென்று செறுமுள்ளி கிராமம் நில அளவை எண்கள்.113, 1/2 மற்றும் கிராமம் எண்.1 முதுமலை கிராம பொது எல்லையின் முச்சந்திப்பில் சென்றடைகிறது.

கிழக்கு:– பின்னர் இவ்வெல்லைக் கோடானது செறுமுள்ளி கிராமம் நில அளவை எண்கள்.113 மற்றும் 92 தென்மேற்கு எல்லையில் தெற்காகவும், தென்மேற்காகவும் சென்று செறுமுள்ளி கிராமம் நில அளவை எண்கள்.92, 6 மற்றும் 1/2ன் முச்சந்திப்பில் சென்றடைகிறது.

(..6..)

தெற்கு:– அதன் பின்னர் இவ்வெல்லைக் கோடானது செறுமுள்ளி கிராமம் நில அளவை எண்.6ன் வடக்கு எல்லையில் வடமேற்காக சென்று செறுமுள்ளி 1 கிராமம் நில அளவை எண்கள்.1/2, 3 மற்றும் 6ன் முச்சந்திப்பில் சென்றடைந்து பின்னர் செறுமுள்ளி கிராமம் நில அளவை எண்.3ன் கிழக்கு எல்லையோரமாக பொதுவாக வடக்காக சென்று செறுமுள்ளி கிராமம் நில அளவை எண்கள்.3, 1/2 மற்றும் 1/1ன் முச்சந்திப்பில் சென்றடைகிறது. பிறகு, இவ்வெல்லைக் கோடானது செறுமுள்ளி கிராமம் நில அளவை எண்.1/1ன் தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு எல்லையோரம் பொதுவாக கிழக்காகவும் வடக்காகவும் சென்று மீண்டும் தெற்காக சென்று செறுமுள்ளி கிராமம் நில அளவை எண்கள்.3, 1/1 மற்றும் 1/2ன் முச்சந்திப்பில் சென்றடைகிறது. பின்னர் இவ்வெல்லைக் கோடானது செறுமுள்ளி கிராமம் நில அளவை எண்.3ன் வடமேற்கு எல்லையோரமாக தென்மேற்காக சென்று செறுமுள்ளி கிராமம் நில அளவை எண்கள்.3, 1/2 மற்றும் நெல்லியாளம் கிராமம் நில அளவை எண்.2ன் முச்சந்திப்பில் சென்றடைகிறது. அதன் பின்னர் இவ்வெல்லைக் கோடானது நெல்லியாளம் கிராமம் நில அளவை எண்.2ன் கிழக்கு, வடக்கு மற்றும் மேற்கு எல்லையோரம் வடக்காகவும் தென்கிழக்காகவும், வடக்காகவும் தென்மேற்காகவும் மற்றும் பொதுவாக மேற்காகவும் தெற்காகவும் சென்று நெல்லியாளம் கிராமம் நில அளவை எண்.2, நெல்லியாளம் கிராமம் பொது எல்லை மற்றும் செறுமுள்ளி கிராமம் நில அளவை எண்.1/2ன் சந்திப்பில் சென்றடைகிறது.

மேற்கு:– பின்னர் இவ்வெல்லைக் கோடானது கிராமம் எண்.9 நெல்லியாளம் கிராமம் பொது எல்லையின் கிழக்கு பகுதியில் பொதுவாக மேற்காகவும் வடக்காகவும் சென்று ஆரம்ப எல்லையை சென்றடைகிறது.

சுப்ரியா ஸாஹூ
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்
15/09/2021